தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பழனியில் முருங்கைக்காய் கிலோ ரூ.150 ஆக அதிகரிப்பு

பழனியில் முருங்கைக்காய் கிலோ ரூ.150க்கு வெள்ளிக்கிழமை விற்பனையானது. தமிழகத்தில் காய்கறிகளில் முக்கிய பங்கை முருங்கைக்காய் பெற்றுள்ளது. முருங்கை மரத்தின் பூ, காய், இலைகள் அனைத்தும் உணவாக பயன்படுவதோடு மருந்தாகவும் பயன்படுகிறது. முருங்கைக்காய் திருமண நிகழ்ச்சிகளிலும், உணவு விடுதிகளிலும் அதிகம் பயன்படுத்தப்படும். தற்போது கார்த்திகை மாதம் துவங்கியுள்ளதால் பலரும் சபரிமலைக்கு விரதம் பூண்டுள்ளதால் வீடுகளில் இறைச்சியின் பயன்பாடு வெகுவாக குறைந்து காய்கறிகள் பயன் அதிகரித்துள்ளது. பழனி மற்றும் ஒட்டன்சத்திரம் பகுதிகளில் அதிக பரப்பளவில் செடி முருங்கை பயிர் செய்யப்பட்டுள்ளது. கடந்த வறட்சி, தொடர்மழையால் பல இடங்களில் முருங்கை மரங்கள் சாய்ந்து விட்ட நிலையில் தற்போது முருங்கை சாகுபடி வெகுவாக குறைந்துவிட்டது. இந்நிலையில் முருங்கையின் பயன்பாடு அதிகரித்து சாகுபடி குறைந்துள்ள நிலையில் பழனியில் கடைகளில் முருங்கைக்காய் வெள்ளிக்கிழமை கிலோ ரூ.250க்கு விற்பனை செய்யப்பட்டது. கிலோவிற்கு பெரிய அளவிலான முருங்கைகள் எட்டு மட்டுமே நிற்கும் நிலையில் ஒரு முருங்கைக்காய் சுமார் 25 ரூபாய்க்கு மேலாக இருந்ததால் காய்கறி வாங்குவோர் பலரும் முருங்கைக்ககாயை எட்டாக்கனியாக பார்த்து விட்டு சென்றனர்.

### நெல்லை, தூத்துக்குடியில் மீண்டும் விடிய விடிய மழை

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வியாழக்கிழமை இரவு தொடங்கி விடிய விடிய மழை பெய்தது. அதிகபட்சமாக திருச்செந்தூரில் 87 மி.மீ. மழையும், நான்குனேரியில் 70 மி.மீ. மழையும் பதிவானது. கன்னியாகுமரி கடல் பகுதியில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தத் தாழ்வு

நிலை காரணமாக, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தொடர் மழை பெய்தது. இதனால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பல்வேறு இடங்களில் குளங்கள் உடைந்து கிராமப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டன. அந்த மழை வெள்ளமே வடியாத நிலையில், வியாழக்கிழமை இரவு தொடங்கிய மழை, விடிய விடிய பெய்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக இந்த மழை நீடித்தது. வெள்ளிக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அணைப் பகுதியிலும், பிற இடங்களிலும் பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 40, பாபநாசம் கீழ் அணை 46, சேர்வலாறு அணை 27, மணிமுத்தாறு அணை 21.2, கடனாநதி அணை 5, ராமநதி அணை 3, கருப்பாநதி அணை 6, குண்டாறு அணை 3, அடவிநயினார் அணை 7, நம்பியாறு அணை 50, கொடுமுடியாறு அணை 30. திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரி 70, அம்பாசமுத்திரம் 24.2, சேரன்மகாதேவி 24, கன்னடியன் அணைக்கட்டு 25, களக்காடு 30.8, ஆயக்குடி 30.8, மூலக்கரைப்பட்டி 48.1, திருநெல்வேலி 17.1, தென்காசி 15.4, செங்கோட்டை 6, ஆலங்குளம் 35.2, ராதாபுரம் 28.2. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் 87, தூத்துக்குடி 54.8, ஸ்ரீவைகுண்டம் 44, ஒட்டப்பிடாரம் 27.5, மணியாச்சி 22, கயத்தாறு 20, கடம்பூர் 17, கழுகுமலை 47, சாத்தான்குளம் 47, காயல்பட்டினம் 72, குலசேகரபட்டணம் 62, கோவில்பட்டி 25, எட்டையபுரம் 5, விளாத்தி குளம் 48, கீழஅரசடி 15. அணைகளின் நீர்வரத்து: பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,200 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 552 கனஅடியும், கடனாநதி அணைக்கு 85 கனஅடியும், ராமநதி அணைக்கு 30 கனஅடியும், வடக்குப் பச்சையாறு அணைக்கு 83 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 30 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. நம்பியாறு அணை நிரம்பியதால் அணைக்கு வந்து கொண்டிருந்த 938

கனஅடியும் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது. கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார் அணைகளின் நீர்வரத்து குறைந்து காணப்பட்டது. வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 138 அடியாகவும், மணிமுத்தாறு அணை 0.75 அடி உயர்ந்து 99 அடியாகவும், சேர்வலாறு அணை 0.75 அடி உயர்ந்து 151 அடியாகவும் இருந்தது. பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி அணை 82 அடி, ராமநதி அணை 82.25 அடி, கருப்பாநதி அணை 65.29 அடி, குண்டாறு அணை 36.10 அடி, அடவிநயினார் அணை 96.25 அடி, வடக்குப் பச்சையாறு அணை 36.50, நம்பியாறு அணை 22.96, கொடுமுடியாறு அணை 52.50 அடி.

## உலக வர்த்தக அமைப்பில் இந்தியாவுக்கு வெற்றி: நிர்மலா சீதாராமன்



"ஜெனீவாவில், உலக வர்த்தக அமைப்பின் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில், உணவுப் பாதுகாப்புத் திட்டம் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இந்த விவகாரத்தில் எவ்வித சமரசத்துக்கோ, நிபந்தனைகளுக்கோ இடம் கொடுக்காமல் இந்தியா இதனைச் சாதித்துள்ளது' என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். ஜெனீவாவில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் (டபிள்யூடிஓ) பொதுக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக இணக்க ஒப்பந்தத்தில் (டிஎஃப்ஏ), இந்தியாவின் வலியுறுத்தலை ஏற்று, வளரும் நாடுகளின் உணவுப் பாதுகாப்புக்குத் திட்டத்துக்கு நிரந்தர உத்தரவாதம் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, மக்களவையில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெள்ளிக்கிழமை தானே

முன்வந்து அறிவித்ததாவது: ஜெனீவா கூட்டத்தில் இந்தியாவுக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டை ஏற்று, வளரும் நாடுகளில் உணவுப் பாதுகாப்புப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை, அந்நாடுகள் பொது விநியோகத்துக்காக எவ்வித வரம்புமின்றி தேவையான உணவு தானியங்களைத் தொடர்ந்து சேமித்துவைக்கவும், மானியம் வழங்கவும் ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியா போன்ற வளரும் நாடுகள் பொது விநியோகத்துக்காக தாராளமாக உணவு தானியங்களைச் சேமித்து வைப்பதோடு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலையையும் தங்குதடையின்றி வழங்க முடியும். இதற்காக, வளரும் நாடுகள் மீது பிற நாடுகள் அபராதம் விதிக்க முடியாது. இந்த வெற்றியை, இந்தியா எதனையும் விட்டுக்கொடுக்காமல், வேறு நிபந்தனைகள் எதற்கும் உட்படாமல் சாதித்துள்ளது. இந்தியா போன்ற நாடுகளில் வாழும் லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை என்பது உயிர்நாடி போன்றது. ஆகையால்தான், இந்தப் பிரச்னையில் முரண்பட்ட அமெரிக்காவிடம், கடந்த மாதம் இந்தியா சரியாக எடுத்துக்கூறி தனது நிலைப்பாட்டுக்கு இசைய வைத்தது. இதன்மூலம் உலக வர்த்தக அமைப்பில் 20 ஆண்டு காலமாக நீடித்துவந்த பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. தன்னை பாதிக்கக்கூடிய பிரச்னையில் இந்தியா உறுதியாக நின்று இந்த வெற்றியைப் பெற்றுள்ளது என்று நிர்மலா சீதாராமன் கூறினார். இந்த ஒப்பந்தத்தை, உலக வர்த்தக அமைப்பில் இடம் பெற்றுள்ள 160 நாடுகளில் மூன்றில் இரு பங்கு நாடுகள் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்கும்போது, இந்த ஒப்பந்தம் தானாகவே உலக அளவில் அமலுக்கு வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். ஒப்பந்த விவரம்: உலக வர்த்தக அமைப்பின் பொதுக் குழுக் கூட்டத்தில் இசைவு தெரிவிக்கப்பட்ட வர்த்தக இணக்க ஒப்பந்தத்தில் (டிஎஃப்ஏ) உள்ள சமாதான ஷரத்து மிக முக்கியமானதாகும். வளரும் நாடுகளின் உணவுப் பாதுகாப்புப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு

காணப்படும்வரை, இந்த சமாதான ஷரத்து நீடிப்பதற்கு டபிள்யூடிஓ ஒப்புக்கொண்டுள்ளது. பொதுவாக, டபிள்யூடிஓ வர்த்தக நெறிமுறைப்படி எந்த ஒரு நாடும், அதன் உணவு தானிய உற்பத்தியில் 10 சதவீத அளவுக்கு மட்டுமே மானியம் வழங்க முடியும், பொது விநியோகத்துக் காகச் சேமித்து வைக்க முடியும். அதற்கு மேல் மானியம் வழங்கினாலோ, சேமித்து வைத்தாலோ, வர்த்தக உடன்பாட்டில் இடம்பெற்றுள்ள மற்ற நாடுகள் அதன் மீது அபராதம் விதிக்க முடியும். இவ்வாறு அபராதம் விதிக்கப்படாமல் இருக்க, சமாதான ஷரத்து வகை செய்கிறது. இதனைத் தான் காலக்கெடு இன்றி நீட்டிப்பதற்கு இந்தியா வலியுறுத்தி, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் கோடி மதிப்புள்ள 6.20 கோடி டன் உணவுதானியங்களை பொது விநியோகத்துக்காகச் சேமித்து வைக்கும் இந்தியாவுக்கு, டபிள்யூடிஓ ஒப்பந்த விவகாரத்தில் கிடைத்துள்ள இந்த வெற்றி மிக முக்கியமானதாகும்.

## திருவாடானை பகுதியில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாடானை பகுதியில் கடந்த இரண்டு நாள்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்துவருகிறது. இதனால் சாலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. போக்குவரத்தும் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப் பட்டுள்ளது. இருப்பினும் வயல்களில் தண்ணீர் தேங்கி யுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.திருவாடானை தாலுகா முழுவதும் சுமார் 1 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பளவில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு, தற்போது பயிர்கள் நன்கு வளர்ந்து உள்ளன. போதுமான மழை இல்லாமலும் கண்மாய்கள் நிரம்பாமலும் இருந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர். தற்போது திருவாடானை பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகளில் மழை நீர் தேங்கி போக்குவரத்து பாதிப்புடன்

இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டாலும் வயல்களில் தண்ணீர் தேங்கியிள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கோழிப் பண்ணைகளில் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது எப்படி ?**

பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க கோழிப் பண்ணைகளில் எத்தகைய பாதுகாப்பு நடவடிக்கையை பண்ணையாளர்கள் எடுக்க வேண்டும் என கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் 487 கோழிப் பண்ணைகள் உள்ளன. இவற்றில் 87 முட்டை கோழிப் பண்ணைகளில் 39 லட்சத்து 81 ஆயிரத்து 641 முட்டை கோழிகளும், 400 கறிக்கோழி பண்ணைகளில் 16 லட்சத்து 48 ஆயிரத்து 780 கறிக்கோழிகளும், 5 லட்சத்து 90 ஆயிரத்து 400 நாட்டுக் கோழிகளும் உள்ளன. 9 நாட்டுக் கோழிக்குஞ்சு பொரிப்பகங்களின் மூலம் மாதந்தோறும் 39 ஆயிரம் நாட்டுக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நாடோடி முறையில் ஏறத்தாழ 5,000 வாத்துகள் கோபி பகுதியிலுள்ள நெல் அறுவடை செய்யும் இடங்களில் வளர்க்கப்படுகின்றன. இந் நிலையில், கேரள மாநிலத்தில் உள்ள பறவைக்காய்ச்சல் தமிழகத்தில் பரவாமல் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் பொ.ஜெயராமன் தலைபி்யில் கால்நடை மருத்துவர்கள் தீவிர கண்காணிப்பு, விழிப்புணர்வுப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பறவைக் காய்ச்சல் நோய் கோழிகளை தாக்காமல் இருக்க கோழிப்பண்ணைகளில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து கோழி நோய் ஆராய்ச்சி ஆய்வுக் கூட உதவி இயக்குநர் ஏ.சின்னசாமி கூறியது: ஈரோடு மண்டலத்திலுள்ள அனைத்து கால்நடை பெரு மருத்துவர்கள், கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களது கட்டுப்பாட்டிலுள்ள கோழிப்பண்ணைகளை தவறாமல் பார்வையிட்டு, கோழிகளில் ஏதேனும் அசாதாரண இறப்பு தென் படுகிறதா எனவும், உயிர் பாதுகாப்பு முறைகள் செயல்படுத்தப் படுவதையும் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்

பட்டுள்ளது. கேரள மாநிலத்தில் இருந்து கோழியினங்கள் (கோழி, வாத்து, வான்கோழி, கினி கோழி, காடை), முட்டை, தீவனம் மற்றும் தீவனம் தயாரிக்க தேவையான மூலப் பொருள்கள் (மீன் தூள்) போன்றவற்றை வாங்கக் கூடாது. கேரள மாநிலத்துக்கு முட்டைகளை எடுத்துச் செல்வதற்கு காகித அட்டைப் பெட்டிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். காகித அட்டைகளை எக் காரணத்தைக் கொண்டும் திரும்ப எடுத்து வரக் கூடாது. கேரள மாநிலத்துக்கு கோழிகள், முட்டைகளை எடுத்துச் செல்லும் அனைத்து வாகனங்களில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். தங்கள் பண்ணையில் கோழிகளில் ஏதேனும் அசாதாரண இறப்பு ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவருக்கு தெரியப்படுத்த வேண்டும். இறந்த கோழிகளை உரிய முறையில் புதைக்க வேண்டும். பண்ணை மற்றும் பண்ணையைச் சுற்றியுள்ள இடங்களில் சுண்ணாம்புத்தூள் மற்றும் கிருமி நாசினி பயன்படுத்தி நோய் ஏற்படாமல் இருக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கோழிகளுக்கு தடுப்பூசி அட்டவணைப்படி முறையாக தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும். பண்ணை நுழை வாயிலில் கால் நனைப்பான் அமைக்க வேண்டும். 2 சதவீத சோடியம் ஹைடிராக்ஃஸடு கரைசலை பண்ணையின் நுழைவாயிலில் காலணி களைச் சுத்தம் செய்யும் வகையில் வைக்க வேண்டும். உபகரணங்களை சுத்தம் செய்வதற்கு 2 சதவீதம் குளோரின் கரைசலை பயன்படுத்தலாம். குவார்ட்டர்னரி அம்மோனியம் சால்ட்ஸ் - 4 சதவீதக் கரைசல் சுவர், தரைகள் மேற்கூரைகள் மற்றும் உபகரணங்களை சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தலாம். கால்சியம் ஹைட்ராக்ஃஸடு 3 சதவீத கரைசல் தரைகளைச் சுத்தப்படுத்துவதற்காக பயன்படுத்தலாம். பார்மலின் மற்றும் பெர்மாங்கனேட் புகை மூட்டத்திற்காக பயன்படுத்தலாம். பண்ணைக்கு வெளிப்பறவைகள் குறிப்பாக வனப் பறவைகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

## வாழைத்தார் விலை உயர்வு

வரத்துக் குறைவாலும் கோயில் விசேஷங்கள் என்பதாலும் பரமத்திவேலூர் ஏல மையத்தில் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி யடைந்துள்ளனர். பரமத்தி வேலூர் காவிரிக் கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், குச்சிபாளையம், வேலூர், அனிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், செங்கப்பள்ளி மற்றும் மோகனூர் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழை கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது. பரமத்திவேலூர் ஏல மையத்தில் நடக்கும் ஏலத்தில் அதிக அளவில் வியாபாரிகள் வந்து வாழையை ஏலத்தில் எடுத்துச் செல்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.150,ரஸ்தாலி ரூ.150, பச்சைலாடன் ரூ.200, கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.150 வீதமும் ஏலம் போயின. வியாழக் கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.250, ரஸ்தாலி ரூ.250, பச்சைலாடன் ரூ.300, கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.300 வீதமும் ஏலம் போயின. மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7-க்கு விற்பனையானது. வாழைத் தார் விலை உயர்ந்துள்ளதால் வாழை பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பயிறு வகை சாகுபடிப் பயிற்சி

விதை கிராமத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பயிறு வகை சாகுபடிப் பயிற்சி நடந்தது. நாமக்கல் வட்ட வேளாண் விரிவாக்க மையம் சார்பில், பயிறு வகைகளில் உயர் விளைச்சல் தொடர்பாக வேளாண் தொழில்நுட்பப் பயிற்சி உதவி இயக்குநர் மாயக்கிருஷ்ணன் தலைமையில் மரூர்பட்டியில் வியாழக்கிழமை நடந்தது. விவசாயி

களுக்குத் தேவையான சான்று விதைகளை, தாங்களே தங்களது நிலங்களில் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். சான்று விதைகளை விதை நேர்த்தி செய்து, மண்ணாய்வுப் பரிந்துரைப்படி உரச்செலவைக் குறைக்க வேண்டும். ஒருங்கிணைந்த முறையில் நீர்பாய்ச்சுதல், பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாள வேண்டும் உள்ளிட்ட ஆலோசனை கள் வழங்கப்பட்டன. வட்டார வேளாண் அலுவலர் பேபிகலா, உயிரியல் கட்டுப்பாட்டு அலுவலர் ராணி, தொழில்நுட்ப மேலாளர் சுபத்ரா, உதவி விதை அலுவலர் ஜெயப்பிரகாஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஓரப்பத்தில் 121 பேருக்கு விலையில்லா ஆடுகள் அளிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் அருகே ஒரப்பத்தில் 121 பயனாளிகளுக்கு ரூ.15.97 லட்சம் மதிப்பில் விலையில்லா ஆடுகளை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வழங்கினார். கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், ஒரப்பத்தில் வெள்ளிக்கிழமை தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா, மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 121 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கி ஆட்சியர் பேசியது: கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் விலையில்லா ஆடுகள் வழங்கப் படுகிறது. விலையில்லா மின் பொருள்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. விடுப்பட்டுள்ள கிராமங்களுக்கு ஜனவரி மாதம் முதல் விலையில்லா மின் பொருள்கள் வழங்கப்படும் என்றார். நிகழ்ச்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் எஸ்.கந்தசாமி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.அர்சுணன், பர்கூர் ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.ஜெயபாலன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அசோலா வளர்ப்பு செயல் விளக்கம்

வந்தவாசி வேளாண்மைத் துறை சார்பில் அசோலா வளர்ப்பு செயல் விளக்கம் மருதாடு கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. வந்தவாசி வேளாண்மை உதவி இயக்குநர் கி.ராஜசேகரன் தலைமை வகித்தார். முன்னோடி விவசாயி மு.மணி வரவேற்றார். அசோலா உற்பத்திக்கான வழிமுறைகள், அதன் பயன்பாடு உள்ளிட்டவை குறித்து வேளாண்மை அலுவலர் தே.குமரன் விளக்கிப் பேசினார். தொழில்நுட்ப வல்லுநர்கள் த.பெருமாள், கி.அவந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## இயந்திரம் மூலம் நெல் நடவு செய்த விவசாயிகளுக்கு மானியம் அளிப்பு

அரியலூர் மாவட்டத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்த 100 விவசாயிகளுக்கு ரூ. 1.50 லட்சம் மதிப்பில் மானியத் தொகைக்கான காசோலையை ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெள்ளிக்கிழமை வழங்கினார். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு எம்பி சந்திரகாசி முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில், 100 விவசாயிகளுக்கு தலா ரூ. 1,500 வீதம் ரூ. 1.50 லட்சம் மதிப்பிலான மானியத் தொகையை வழங்கி ஆட்சியர் பேசியது: அரியலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு அக்டோபர் மாதம் சராசரி மழை அளவை விட சற்றே கூடுதலாக மழை பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் ஒரே சமயத்தில் நெல் நாற்றங்கால் தயாரித்து, ஒரே நேரத்தில் நடவு செய்ய வேண்டிய நிலையில் வேலை ஆள்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழலில் விவசாயிகளின் சிரமத்தை தவிர்க்க வேண்டி, நெல் நடவுப் பணிகளை இயந்திரம் மூலம் மேற்கொள்ள அரசு திட்டம் வகுத்துள்ளது. இயந்திர நெல் நடவை விவசாயிகளிடம் பிரபலப்படுத்தும் வகையில் அரியலூர் மாவட்டத்துக்கு 680 ஹெக்டேரில் இயந்திர நடவு செய்ய ரூ. 1.20 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேளாண்மைத்துறை கள

அலுவலர்கள் முடுக்கி விடப்பட்டு, இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்றார் ஆட்சியர் சரவணவேல்ராஜ். இதில், எம்பி சந்திரகாசி பேசியது: தமிழக அரசின் பல்வேறு திட்டங்களால் அரியலூர் மாவட்டத்தில் ஏழை, எளிய விவசாயிகள் அதிகளவில் பயன்பெற்று வருகின்றனர் என்றார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் பா. ரவீந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் ஏ.ஆர். குணசேகரன் உள்ளிட்ட துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>ஆட்டுப்பட்டி அமைக்க 58 பேருக்கு நிதியுதவி</u>

விலையில்லா ஆடுகளுக்கு ஆட்டுப்பட்டி அமைக்க 58 பேருக்கு ரூ. 1.16 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றியம், தாளப்பட்டி ஊராட்சியில் உள்ள இந்திரா காலனியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை விலையில்லா ஆடுகளுக்கு நடைபெற்ற குடற்புழு நீக்க மருந்துகள் வழங்கும் முகாமில், 58 பேருக்கு விலையில்லா ஆடுகளுக்கு ஆட்டுப்பட்டி அமைக்க ரூ. 1.16 லட்சம் வழங்கி மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி பேசியது: தமிழக முதல்வரால் கடந்த செப். 2011-ல் தொடங்கி வைக்கப்பட்ட விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் கரூர் மாவட்டத்தில் 2011-12 ஆம் ஆண்டில் 1,842 பயனாளிகளுக்கு 7,368 ஆடுகளும், 2012-13 ஆம் ஆண்டில் 3,003 பேருக்கு 12,012 ஆடுகளும், 2013-14 ஆம் ஆண்டில் 2,391 பேருக்கு 9,564 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. நிகழாண்டில் இதுவரை 1,861 பேருக்கு 7,444 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. கரூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 157 ஊராட்சிகளில் 2014 முடிய 122 கிராமங்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் டிசம்பர் மற்றும் ஜனவரியில் 8 கிராமங்களுக்கு வழங்கப்பட உள்ளது. விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள 36,388

ஆடுகளுக்கு இதுவரை 43,350 குட்டிகள் பிறந்துள்ளன. இந்தக் குட்டிகளை விற்காமல் வளர்த்து ஆட்டுப்பண்ணை உரிமையாளர்களாக அனைத்துப் பயனாளிகளும் உருவாக வேண்டும் என்றார் ஆட்சியர்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் (பொ) எல். பழனிவேல், உதவி இயக்குநர் என். குழந்தைவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>தஞ்சை மாவட்டத்தில் மீண்டும் பரவலாக மழை</u>

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு வாரத்துக்குப் பிறகு மீண்டும் வெள்ளிக் கிழமை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் ஒருவார காலமாக மழை பெய்யாமல் இருந்த நிலையில் மீண்டும் வெள்ளிக்கிழமை அதிகாலை முதல் மழை பெய்யத் தொடங்கியது. மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): பட்டுக்கோட்டை 44, அதிராம்பட்டினம் 42, பேராவூரணி 18.2, மதுக்கூர் 13.4, ஈச்சன்விடுதி 8.4, குருங்குளம் 5, ஒரத்தநாடு 4.4, நெய்வாசல் தென்பாதி 4, அய்யம்பேட்டை, கும்பகோணம், தஞ்சாவூர், வல்லம் தலா 2, வெட்டிக்காடு 1.8, திருவிடைமருதூர் 1.3, பாபநாசம் 1. இந்த மழை பிற்பகலிலும் நீடித்தது. மாவட்டத்தில் மாலை 4 மணி வரை பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): பட்டுக்கோட்டை 44, வல்லம் 41, மஞ்சலாறு 34.6, அணைக்கரை 32, திருவிடைமருதூர் 28.5, வெட்டிக்காடு 28.2, தஞ்சாவூர் 28, குருங்குளம் 27, அய்யம்பேட்டை 26, திருவையாறு 25.2, கும்பகோணம் 25, பூதலூர் 24.4, பாபநாசம் 24, திருக்காட்டுப்பள்ளி 21.4, கல்லணை 20, அதிராம்பட்டினம் 13.6, ஈச்சன்விடுதி 12.4, மதுக்கூர் 4.8, பேராவூரணி 4, ஒரத்தநாடு 3, நெய்வாசல் தென்பாதி 2.5.

## <u>நாகை மாவட்டத்தில் பலத்த மழை</u>

நாகை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது. வெள்ளிக்கிழமை காலை நிலவரப்படி வேதாரண்யத்தில் அதிக பட்சமாக

126 மி.மீ. மழை பெய்துள்ளது. தமிழகத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் அவ்வப்போது காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி மழை பெய்து வருகிறது. கடலோர மாவட்டமான நாகையில் வியாழக்கிழமை இரவு தொடங்கிய மழை வெள்ளிக்கிழமை காலை வரை நீடித்தது. வெள்ளிக்கிழமை பகலிலும் லேசான தூறல் இருந்தது. மழை காரணமாக கடல் சீற்றமாக இருந்தது. எனவே நாகை, வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெரும்பாலான மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. மயிலாடுதுறையிலும் மழை காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மழையளவு: வேதாரண்யம் 126 மி.மீ., தலைஞாயிறு 34 மி.மீ., திருக்குவளை 29 மி.மீ., நாகை 20 மி.மீ. மொத்தம்219மிமீபெய்துள்ளது.

**<u>விலையில்லா கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு சிகிச்சை: ஆட்சியர் ஆய்வு</u>**

தமிழக அரசு பயனாளிகளுக்கு வழங்கிய கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு அளிக்கப்படும் நோய்த் தடுப்பு சிசிக்சை குறித்து மாவட்ட மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார். திருவாரூர் அருகே வேளக்குடி, தண்டலை ஆகியக் கிராமங்களில் புதன்கிழமை தமிழக அரசு வழங்கிய இலவச கறவை மாடுகள், வெள்ளாடுகளை பார்வையிட்டு, அவற்றுக்கு மேற்கொண்ட குடல்புழு நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு முறையை ஆய்வு செய்து அவர் கூறியது: தமிழக அரசு விலையில்லா கறவைப் பசு மற்றும் விலையில்லா வெப்ப்ளாடுகள் வழ ங்கும் திட்டம், மாநில கோழி அபிவிருத்தி திட்டம், தீவன அபிவிருத்தி விரைவு திட்டம், உலா தீவன கிடங்கு, கால்நடை பாதுகாப்புத் திட்டம், நபார்டு திட்டத்தின் கீழ் புதிய கால்நடை மருந்தகம் கட்டும் திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கால்நடை மருந்தகங்கள் கட்டுதல், தேசிய புரதச்சத்து பெருக்க இயக்கம், விரைவுபடுத்தப்பட்ட கோமாரி நோய் தடுப்புத் திட்டம் என கால்நடைகளுக்கென பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ வசதிகள் பெற இயலாத சூழ்நி லைகள் இருந்தாலும் அங்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. முகாம்களில் நோய் ஆய்வு, தடுப்பூசி போடுதல், குடல்புழு நீக்கம் செய்தல், சினைப் பரிசோதனை செய்தல், மலட்டு தன்மை நீக்கம் ஆகிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறது. மாவட்டத்தில் நிகழாண்டு 140 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டு முகாம்கள் நடைபெற்று வருகிறது என்றார் மதிவாணன். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் தமிழ்செல்வன், உதவி இயக்குநர் தனபாலன் ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோக்கோ செடிகள் மானியத்தில் வழங்கல்</u>**

விழுப்புரம்: தோட்டக்கலை துறை மூலம் கோலியனூர் ஒன்றிய விவசாயிகளுக்கு 95 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விதை மற்றும் கோக்கோ செடிகள் மானியத்தில் வழங்கப்பட்டது. கோலியனூர் ஒன்றியம் பிடாகம், நரையூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தில் 4 விவசாயிகள், தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் பொய்யப்பாக்கம், கண்டம்பாக்கத்தைச் சேர்ந்த 4 விவசாயிகள், அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுக் குழு கிராமங்களான வேலியம் பாக்கம், கல்லப்பட்டு கிராமத்தை சேர்ந்த 4 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். இவர் களுக்கு தோட்டக்கலை துணை இயக்குனர் வீராசாமி 35 ஆயிரம் ரூபாய் மதிப்பில் மானிய விலையில் விதைகள் வழங்கினார். வளவனூர், பில்லூர், வழுதரெட்டி கிராமங்களை சேர்ந்த 4 விவசாயிகளுக்கு 60 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கோக்கோ செடிகள் வழங்கப்பட்டது.

தோட்டக்கலை அலுவலர் முருகன், உதவி வேளாண்மை அலுவலர் பரமசிவம், சிவராமன் உடனிருந்தனர்.

**57 விவசாயிகளுக்கு ரூ.13.66 லட்சம்பயிர் காப்பீட்டு தொகை வழங்கல்**

பெருந்துறை:பெருந்துறை ஆர்.எஸ்.தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், தகுதியான விவசாயி களுக்கு, பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கும் விழா நடந்தது.சங்க தலைவர் சின்னுசாமிக்கவுண்டர் தலைமை வகித்தார். செயலாளர் சுபாஷ்சந்திரன் வரவேற்றார். விவசாயி கள், சங்கத்தில் பயிர் கடன் பெற்று, காரிப் பருவப் பயிர்களான மஞ்சள், கரும்பு போன்ற பயிர்களை பயிரிட்டனர். பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்து இருந்தனர். ஈரோடு மாவட்டத்தில் போ திய மழை இல்லாததால், கரு ம்பு மற்றும் மஞ்சள் பயிர், பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு, தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. மொத்தம், 57 விவசாயிகளுக்கு, 13.66 லட்சம் ரூபாய், பயிர் காப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டது.சங்க லாபத்தொகை மற்றும் சங்கத்தின் "அ-வகுப்பு' உறுப்பினர்களுக்கு, 14 சதவீத டிவிடென்ட் தொகையும் வழங்கப்பட்டது. இதில், சங்க நிர்வாகிகள் முத்துசாமி, தெய்வசிவம், நடராஜ், செந்தில்குமார், சக்திவேல், கிருஷ்ணன், பழனிசாமி, ஜானகி, சித்ரா உட்பட பலர் பங்கேற்றனர்.

**முழு அளவில் தேங்கிய நீர்பசுமையாக காணப்படும்பெரும்பள்ளம் அணை**

சத்தியமங்கலம்:தொடர்மழையால், பெரும்பள்ளம் அணையின் நீர்தேக்க பகுதி, பசுமையாக காணப்படுகிறது. மேலும், அணையில் இருந்து உபரி நீர் செல்வதால், இப்பகுதி விவசாய கிணறுகளில், நீர் மட்டம் அதி கரித்துள்ளது.சத்தியமங்கலம் அடுத்துள்ளது கடம்பூர் மலைப்பகுதியின் அடிவாரத்தில் உள்ள கே.என்.பாளையத்தில், பெரும்பள்ளம் அணை உள்ளது.கடந்த, 1984 ஜூலை மாதம், இந்த அணை கட்டும் பணி

துவங்கி, 1989 ஏப்ரல் மாதம் பணி முடிந்தது. மொத்தம், 5.41 கோடி செலவில், கட்டப்பட்ட பெரும்பள்ளம் அணை, 1992 ஜனவரி மாதம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் திறக்கப்பட்டது.இந்த அணையின் மொத்த நீர்மட்ட உயரம், 312 மீட்டர். அணையின் முழு கொள்ளளவு, 115.80 மில்லியன் கனஅடியாகும்.இந்த அணையால், கே.என்.பாளையம், தாசரிபாளையம், கொண்டப்பநாயக்கன்பாளையம், செல்லிபாளையம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த, 1,030 ஹெக்டர் விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது.இவ்வாறு, முக்கியத்துவம் பெற்ற பெரும்பள்ளம் அணையின் நீர்பிடிப்பு பகுதியான, கடம்பூர் மலைப்பகுதியில், கடந்த, அக்., நவ., மாதம் பெய்த மழையால், நீர் தேங்கி, அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளது. தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், உபரி நீர் அணையில் இருந்து வெளியேறி வருகிறது.அணையின் உபரி தண்ணீர் வெளியேறுவதாலும், அணை முழுவதும் நிரம்பியதாலும், இப்பகுதியில் உள்ள விவசாய கிணறுகளில், நீர் மட்டம் அதிகரித்துள்ளது.இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், கடம்பூர் ரோட்டில் இருந்து பார்த்தால், அணையின் நீர்தேக்க பகுதி, நீர் நிலைகளுடன், பசுமையாய் காட்சி அளிக்கிறது.

**<u>கோழிப்பண்ணை சார்ந்த பொருட்களை நீலகிரிக்குள் கொண்டுவர தடை</u>**

ஊட்டி: கோழிப்பண்ணை சார்ந்த பொருட்களையும் வெளி மாநிலங்களில் இருந்து, நீலகிரிக்கு கொண்டு வர தடை விதிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் முன்னிலையில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், பறவை காய்ச்சல் மற்றும் பறவை காய்ச்சல் தடுப்பு பணிகள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இதுதான் அறிவுரைகள் வாத்துக்கள் இறப்பு குறித்து அறிந்தால், கால்நடை துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். நோய் தாக்கியுள்ள

வாத்துக்களை அழித்து விட வேண்டும். கூடலூரில் உள்ள 6 சோதனைச் சாவடிகளில், ஒரு கால்நடை உதவி மருத்துவர், 2 கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மண் வயல் பகுதியில் புதிதாக சோதனைச் சாவடி அமைக்க வேண்டும். வனப்பகுதி ஆற்றோரங்கள், நீர் நிலைகளில் பறவைகள் இறந்திருந்தால், வனத்துறை மற்றும் போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். பஸ்களில், கோழிகளை ஏற்ற, போக்குவரத்து துறை அனுமதிக்க கூடாது. உரம், முட்டை, தீவனம், கோழிக் கழிவுகள் உட்பட எந்தவொரு கோழிப்பண்ணை சார்ந்த பொருட்களையும் வெளி மாநிலங்களில் இருந்து, நீலகிரிக்குள் கொண்டு வரக் கூடாது. "டாமி ஃப்ளு' மாத்திரைகளை போதியளவு, இருப்பு வைக்க வேண்டும். கோழிப் பண்ணை பணியாளர்களுக்கு மாத்திரைகளை முன்கூட்டியே கொடுக்க வேண்டும். கேரளாவிலிருந்து வரும் அனைத்து வாகனங்களின் அடிப்பாகம், டயர்களில் கிருமி நாசினி தெளிக்க வேண்டும். கோழிகளை அழிக்கும் போது, 20 அடி ஆழம் குழி வெட்டி, பிளீச்சிங் பவுடர் கொட்டி அதன் மீது கோழிகளை சாக்கு பைகளில் அடைத்து, அதன் மீது பிளீச்சிங் பவுடர், 5 அடி அளவிற்கு மண் கொண்டு நிரப்ப வேண்டும். இவ்வாறு, அறிவுரைகள் வழங்கப்பட்டன. கூட்டத்தில், மாவட்ட எஸ்.பி., செந்தில்குமார், கால்நடை துறை இணை இயக்குனர் மனோகர், மருத்துவப் பணிகள் துறை இணை இயக்குனர் பெருமாள் உட்பட அனைத்து துறை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

## <u>வேளாண் துறை பணிகள் கலெக்டர் ஆய்வு</u>

தஞ்சாவூர்:வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து, தஞ்சை கலெக்டர் ஆய்வு செய்தார். அப்போது, திருமலை சமுத்திரம் பிடாரி ஏரியை தூர்வார வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.தஞ்சை மாவட்டம், முன்னையம்பட்டி, திருமலை சமுத்திரம், செங்கிப்பட்டி ஆகிய பகுதிகளில் வேளாண்மைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளை, கலெக்டர் சுப்பையன் ஆய்வு

செய்தார்.முன்னையம்பட்டியில் இருதயசாமி என்பவர் வயலில் கரும்பு சாகுபடி நாற்றங்காலை ஆய்வு செய்தார். அங்கு நடந்த வயல்வெளியில், 25 உறுப்பினர்களை கொண்ட பண்ணை பள்ளி செயல்பாடுகளை பார்வையிட்டார். அப்போது, இந்த பகுதிக்கு கட்டளை மேட்டு வாய்க்கால் பகுதியிலிருந்து வரும் தண்ணீர் முத்துடையான் ஏரிக்கு வந்து அங்கிருந்து பிரிந்து, வடக்குவாய்க்கால் மூலம் வயல்களுக்கு பாயும். ஆனால், வடக்கு வாய்க்கால் பகுதியில் ஆக்கிரமிப்புகள் இருப்பதால், வயல்களுக்கு தண் ணீர் கிடைப்பதில்லை. எனவே, அப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், என்று விவசாயிகள் தெரிவித்தனர். அதன் பின், திருமலை சமுத்திரம் பகுதியில், 200 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்களை ஆய்வு செய்தார். அப்போது, அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் கடந்த, மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தண்ணீர் இல்லாததால், சாகுபடி பணிகள் நடக்கவில்லை. தற்போது இந்த பிடாரி ஏரியில் தண்ணீர் வந்துள்ளது. இதனால், சாகுபடி நல்ல முறையில் நடக்கிறது. பிடாரி ஏரி தஞ்சை மாவட்டம், புதுக் கோட்டை மாவட்டம் எல்லையில் அமைந்துள்ளது. இதில் தண்ணீர் நிரம்பினால், இரண்டு மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் பயன் பெறுவர். எனவே, இந்த ஏரியை தூர்வார வேண்டும், என்று விவசாயிகள் தெரிவித்தனர். அப்போது கலெக்டர் சுப்பையன் கூறியதாவது:கட்டளை வாய்க்காலில், 26 ஏரிகளும், உய்யக்கொண்டான் வாய்க்காலில், 16 ஏரிகளும் உள்ளது. இந்த வாய்க்கால்கள் மூலம் ஏரிகளுக்கு தண்ணீர் சென்று, 7,000 ஹெக்டர் பரப்பில் சாகுபடி செய்ய முடியும். தற்போது எடுத்துள்ள முயற்சியால், 6,000 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இன்னும், ஒருமுறை ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பினால் அதிக மகசூலை பெற முடியும். இவ்வாறு தெரிவித்தார்.ஆய்வின் போது, திட்ட இயக்குனர் வரதராஜன், வேளாண் இணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர்கள் சீனிவாசன், கிருஷ்ணகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தஞ்சையில் பலத்த மழை

பள்ளிகளுக்கு விடுமுறைதஞ்சாவூர்:தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்று அதிகாலை முதல், மதியம் வரை சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. விடாது பெய்த அடை மழையால், பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, தமிழகத்தின் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல், பலத்த மழை பெய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட் டத்தில், நேற்று அதிகாலை முதல், மதியம் வரை சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. காலை, 8 மணி நிலவரப்படி மாவட்டம் முழுவதும், 152 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, பட்டுக்கோட்டை, ஆதிராம்பட்டிணம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில், 44 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. விடாது பெய்த அடை மழை காரணமாக, தஞ்சை மாவட்ட பள்ளிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. இருந்தும் விடுமுறை அறிவிப்பை மாவட்ட நிர்வாகம் காலதாமதமாக அறிவித்ததால், வழக்கம் போல், நேற்று காலை மாணவர்கள் பலர் மழையில் நனைந்தவாறும், குடை பிடித்தவாறும் பள்ளிகளுக்கு சென்றனர். விடுமுறை அளிக்கப்பட்ட தகவல் தெரிந்ததும், மீண்டும் மழையில் நனைந்தவாறு வீடு திரும்பினர்.

## கோடியக்காட்டில் கால்நடைசிறப்பு மருத்துவ முகாம்

வேதாரண்யம்: வேதாரண்யம் அடுத்த கோடியக்கரை சரணாலயப் பகுதியில் உள்ள விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு, கிராமங்களில் உள்ள கால்நடைகள் மூலம் நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக, வனத்துறை சார்பில், ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ், சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. கோடியக்கரை கால்நடை மருந்தகம், மற்றும் கோடியக்காடு ஆகிய இடங்களில் நடைபெற்ற கால்நடை நோய் மற்றும் கோமாரிநோய் தடுப்பூசி முகாம், கால்நடை மருத்துவர் மீனாட்சிசுந்தரம்

தலைமையில் நடந்தது.மருத்துவக்குழுவினர், 200 மாடுகள், 350 ஆடுகள் மற்றும் கோழிகளுக்கும் பரிசோதனை செய்து தடுப்பூசி போட்டனர். முகாமில், கோடியக்கரை வனச்சரகர் கோபிநாத், வனவர் இளங்கோவன், வனக்காப்பாளர்கள், கோடியக்காடு பஞ்சாயத்துத் தலைவர் பவானி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**<u>வேளாண்துறை அழைப்பு</u>**

வடமதுரை:வடமதுரை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் விதைப்பண்ணை அமைப்பதற்கு ஆர்வமுள்ள விவசாயிகள் தேர்வு செய்யும் பணி நடக்கிறது. தரமான விதைகளை உற்பத்தி செய்து தரும் விவசாயிகளின் வயல்கள் விதைப்பண்ணைகளாக பதிவு செய்து கூடுதல் லாபம் பெறலாம். பயறு வகைளுடன் இந்தாண்டு நெல் மற்றும் நிலக்கடலை பயிர்களிலும் விதைப் பண்ணை அமைக்கப்படுகிறது. விதைப் பண்ணைகளில் கொள்முதல் செய்யப்படும் விதைகளுக்கு உள்ளூர் சந்தை விலையை காட்டிலும் கிலோவிற்கு 3 ரூபாய் கூடுதலாக அரசு மானியம் வழங்கப்படும். விதைப்பண்ணை அமைப்பதற்கான விவசாயிகள் தேர்வு பணி நடப்பதால், ஆர்வமுள்ளவர்கள் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகுமாறு வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் ராணி தெரிவித்துள்ளார்.

**<u>பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைதேனி மாவட்டத்தில் 24 சிறப்பு குழுக்கள்</u>**

கம்பம்:கேரளாவில் பறவைக் காய்ச்சல் பரவியதை தொடர்ந்து தேனி மாவட்டத்தில் 24 சிறப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கேரளாவில் ஆழப்புழா, பத்தனம்திட்டா, கோட்டயம் மாவட்டங்களில் வாத்துக்களுக்கு பறவைக்காய்ச்சல் பரவியுள்ளது. தமிழ்நாட்டில் பரவாமல் தடுக்க கால்நடை பராமரிப்புத்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். பறவை காய்ச்சலை தடுக்க மாவட்ட அளவில் 3 குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தது. கலெக்டரின் உத்தரவுப்படி தேனி

மாவட்டத்தில் உள்ள 8 ஊராட்சி ஒன்றியங்களில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 3 சிறப்பு கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு டாக்டர் மற்றும் டெக்னீசியன்கள் இடம் பெற்றுள்ளனர். மேலும் கம்பம்மெட்டு, போடிமெட்டு மற்றும் குமுளி சோதனை சாவடிகளில் தனிக்குழுக்கள் முகாமிட்டுள்ளது. ஒவ்வொரு சோதனை சாவடிக்கும் 4 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் இந்த குழுவினர் பணியில் இருப்பர். கேரளாவில் இருந்து வரும் வாகனங்களின் சக்கரங்களில் தடுப்பு மருந்து தெளிக்கப்படுகிறது.கால்நடைபராமரிப்புத் துறையினர் கூறியதாவது: கோட்டூர், சீலையம்பட்டி, சின்னமனூர் பகுதிகளில் 15 ஆயிரம் வாத்துகள் உள்ளன. இவற்றை தீவிரமாக கண்காணித்து வருகிறோம். மேலும் கோழிப்பண்ணைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை தேனி மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பரவவில்லை. தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு கோழிகள் மற்றும் முட்டைகள் ஏற்றிச் சென்று, அங்கிருந்து திருப்பி அனுப்பபட்டால், மீண்டும் தமிழகத்திற்குள் அனுமதிக்க மாட்டோம் என்று லாரி ஓட்டுனர்களிடம் எழுதி வாங்கி அனுப்பி வருகிறோம்.கேரளாவில் இருந்து வாத்து, வாத்து முட்டைகள் தமிழகத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை, என்றனர்.

## <u>விவசாயிகள் ஆர்வம்</u>

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்திற்கு உட்பட்ட புல்லமடை, செங்குடி, உப்பூர், ஆவரேந்தல், களங்காப்புளி ஆகிய கிராமங்களில் நெல், மிளகாய் பயிர்களுக்கு மாற்றுபயிராக சிறுதானிய பயிர்களான கேழ்வரகு,கம்பு,குதிரைவாலி உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் விதைப்பு செய்துள்ளனர். குறைந்த சாகுபடி செலவில் அதிக வருவாய் கிடைப்பதால்,இப்பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்

# <u>அதிக பனியால் மலராத மல்லிகை பூ</u>

காரைக்குடி: அதிக பனியால் மல்லிகை பூ விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மங்கையரை கவரும் மலர்களில் மல்லிகைக்கு தனி மவுசு உண்டு. மதுரை மல்லிகைக்கு தனி மவுசு இருப்பதற்கு, மற்ற மாவட்டங்களில் மணக்கும் மல்லிகை இங்கு வருவதே காரணம். அந்த வகையில் காரைக்குடி சாக்கோட்டை அருகே பெரியகோட்டை, ஆயினிபட்டி, செங்கரை நால்ரோடு பகுதியில் 5 ஏக்கரில் மல்லிகை விவசாயம் நடக்கிறது. வாரம் ஒரு முறை, வரப்பை சரி செய்து வாட்டம் போக்கும் அளவுக்கு தண்ணீரும் அளவான மருந்தும் தெளித்தால் அன்றி, மல்லிகை அரும்பு மணத்துடன் மலராது. ஒரு முறை நட்ட செடி 10 ஆண்டு வரை பலன் தரும்.ஒரு செடியில் 200 கிராம் பூக்களை நாள் ஒன்றுக்கு பறிக்கலாம். பனி விழும் காலங்களிலோ, அதே செடியில் 20 முதல் 30 எண்ணிக்கையிலான பூ பறிப்பதே அபூர்வம் என்கிறார் பெரியகோட்டை விவசாயி மாயாண்டி. அவர் கூறும்போது: கடந்த ஆண்டை காட்டிலும், இந்த ஆண்டு அதிக அளவில் பனி இருப்பதால் மல்லி அரும்பவில்லை. 200 கிராம் பறித்த செடியில், 20 பூ கிடைப்பதே அபூர்வம். தற்போது கிலோ ரூ.500-க்கு வாங்கி செல்கின்றனர். பூக்கும் தருணங்களிலோ கிலோ ரூ.130-க்கு சென்று விடும். எப்படி பார்த்தாலும் விவசாயிக்கு இழப்பு தான். இதே நிலையில் பனிக்காலம் தொடர்ந்தால் இனி வரும் காலங்களிலும் பூப்பது என்பது குறைவாகவே இருக்கும். இதனால், மல்லிகை விலையும் மலை உச்சியிலிருந்து கீழே வர வாய்ப்பில்லை, என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## கலெக்டர் தலைமையில் ஆலோசனை பறவைக்காய்ச்சலை தடுக்க 9 குழுக்கள் அமைப்பு எல்லையில் வாகனங்கள் நிறுத்தம்

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் பரவாமல் தடுக்க கலெக்டர் சம்பத் தலைமையில் ஆலோசனைகூட்டம் நடந்தது. முன்னெச்சரிக்கையாக 9 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் பறவைக்காய்ச்சல் நோய்வராமல் தடுப்பது குறித்து கால்நடைத்துறை அதிகாரிகளுடன் ஆலோசனைக்கூட்டம் கலெக்டர் சம்பத் தலைமை யில் நடந்தது. கூட்டத்தில் அவர் பேசுகையில், பறவை காய்ச்சல் நோய் கேரளாவில் அதிகமானதை தொடர்ந்து, தமிழகத்தில் நோய்பரவாமல் தடுக்க அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் 9 அதிரடிப்படை அமைக்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் சோதனைச்சாவடிகளில் வாகனங்களை சோதனை செய்யும்போது கேரளா மற்றும் ஆந்திராவிலிருந்து வரும் வாகனங்களில் கோழி கள் மற்றும் வாத்துகள் கொண்டு வரப்படுகிறதா? என்பதை கண்காணிக்க வேண்டும். பறவைகாய்ச்சல் நோய் பறவை இனங்களை அதி தீவிரமாக தாக்கி வருகிறது. கோழி, வாத்து, நீர்கோழி, வான்கோழி மற்றும் வனப்பறைகளை தாக்கும் சக்தி கொண்டது. இந்த நோய் பாதித்த பண்ணைகளில் இறந்த கோழிகள், கோழிக் கழிவுகள், பண்ணை உபகரணங்கள், முட்டைதட்டுகள், கோழி தீவனம், உடைந்த முட்டைகள், குஞ்சு பொறிக் கும் இயந்திரங்கள், பறவை கூண்டுகள் ஆகிய வற்றிலிருந்து வைரஸ் நேரடிதொடர்பு மற்றும் காற்றின் மூலம்

கோழிகளை தாக்கும். இந்நோய் தாக்கம் ஏற்பட்டால் தலைவீக்கம், கொண்டையில் நீலநிறம் பரவுதல், சிலிர்த்த இறகுகள் மற்றும் கண்கள், நாசியிலிருந்து நீர்வடிதல், தீவனத்தில் நாட்டமின்மை, சோர்வு 100 சதவீதம் வரை இறப்பு ஆகியவை ஏற்படும். இந்த நோய்க்கு சிகிச்சை ஏதும் இல்லை. எனவே நோய் தாக்காமல் இருக்க சுகாதார பணிகளை முறையாக மேற்கொள்ள வேண்டும். சாதாரணமாக இந்நோய் மனிதர்களை தாக்குவதில்லை. ஆனால் நோயுள்ள பறவைகளை மனிதர்கள் கையாளும் போது தாக்கப்படுகின்றனர். கோழி இறைச்சி மற்றும் முட் டையை நன்கு வேகவைத்து சமைப்பதின் மூலம் வைரஸ் கிருமி அழிந்துவிடும். இந்நோய் மனிதர்களை தாக்கினால் அதன் அறி குறியாக காய்ச்சல், தொண்டைப்புண், இருமல், நிமோனியா, கண்களில் புண்கள், தசைகளில் வலி ஏற்படுதல், நோய் முற்றிய பின் சுவாச பிரச்சனை ஏற்படும். ஆசியா, ஐரோப்பியா நாடுகளை இந்நோய் தாக்கியுள்ளது. பண்ணை வைத்திருப்பவர்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை பண்ணை வளாகத்தை சுற்றி கிருமிநாசினி மருந்து தெளிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில் கால் நடைத்துறை மண்டல இணை இயக்குநர் அப்சல், உதவி இயக்குநர் மகேந்திரன், வட்டாரபோக்குவரத்து அதிகாரி பாஸ்கர் மற் றும் காவல்துறை, சுகாதாரத் துறை அதிகாரிகள், செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி சிங்காரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வெளிநாட்டு பறவைகள் மூலம் பரவலாம். விழுப்புரம் மாவட்டத்திற்கு வெளிநாடுகளிலிருந்து கொக்கு, நாரை போன்ற பறவைகள் சரணாலயங்களுக்கு வருகிறது. வெளிநாடு களிலிருந்து வரும் பறவைகள் மூலமாகவும் இந்நோய் பரவுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.எனவே பறவைகள் சரணாலயங்கள் அருகில் உள்ள கோழிப்பண்ணைகள் மற்றும் வாத்துகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தொற்று நோய்பரவாத

வண்ணம் மருந்துகளை தெளித்து சுத்தமாக பராமரிக்கவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

## <u>கோழிக்கொண்டை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>

சங்கராபுரம், : சங்கராபுரம் பகுதியில் உள்ள மூலக்காடு, சீர்ப்பாதநல்லூர், புளியாங்கோட்டை, மூங்கில்துறைப்பட்டு, பொரசப் பட்டு உட்பட பல்வேறு கிராமங்களில் மாற்று பயிரான கோழிக்கொண்டை பூவை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். ஆறு மாதகால பயிராகும். மற்ற தோட்டக்கலைத்துறை பயிர்களை விட நோய் தாக்கம் இதில் குறைவு. தண்ணீர் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை பாய்ச்சினால் போதும், ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை போது மானது. ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சம் வரை லாபம் கிடைக்கிறது. பராமரிப்பு செலவும் மிக குறைவு. கோழிக்கொண்டை மற்ற பூக்களை விட வாடாமல் இருப்பதால், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படாது. இதனால் பூ வியாபாரிகள் இதனை அதிக அளவில் வாங்கி விற்பனை செய்கின்றனர். மற்ற பூ பயிர்களை காட்டிலும் மிக குறைந்த செலவில் அதிக லாபம் தருவதால் இதனை இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர்.

## <u>மாட்டு தீவன பயிர் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம்</u>

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி தாலுகாவில் மேய்ச்சல் நிலங்கள் குறைந்து போனது. விளை நிலங்கள் அனைத்து மனைகளாக பிரிக்கப்பட்டு வருகிறது. இதனால் கால் நடைகள் தீவனம் கிடைக்காமல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகரப்பகுதியில் கால்நடைகள் வளர்ப்பு குறைந்து கொண்டு வருகிறது. கிராமங்களில் விளைநிலங்கள் அதிகமாக வைத்திருப்பவர்களே கால்நடை வளர்ப்பில் தற்போது ஆர்வம் காட்டுகின்றனர். மேய்ச்சல் நிலங்கள் குறைந்து விட்டதால் கால் நடை வளர்ப்பு குறைந்துவிட்டது. கால்நடை வைத்திருப்பவர்களும் மேய்ச்சலுக்கு விடாமல் வீட்டில் கட்டிப்போட்டு வளர்க்கின்றனர்.

கால்நடைகளுக்கு தேவைப் படும் தீவனத்தை, பெறுவதற்கு மாட்டு தீவன பயிர் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.கால்நடைகள் தீவனங்கள் விலை அதிகமாக உள்ளது.எனவே விவசாயிகள் மாட்டு தீவன பயிர்களை தாங்களே வளர்ப்பதால் தீவன செலவை சமாளிக்க முடிவதாககூறினர்.

<u>பஞ்சப்பள்ளி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 3260 ஏக்கர் பாசன வசதி பெறும்</u>

தர்மபுரி, : பஞ்சப்பள்ளி சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் மூலம் 3260 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு பஞ்சப்பள்ளி சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதனை ஏற்று நேற்று பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட்டது. பாலக்கோடு எம்எல்ஏ அன்பழகன், மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் ஆகியோர் பழைய மற்றும் புதிய பாசனப்பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து வைத்து மலர் தூவினர். நிகழ்ச்சியில் மாநில பட்டு வளர்ச்சி குழு தலைவர் மணிவண்ணன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர்(பொ) நாகராசன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் ரங்கநாதன், ஒன்றியக்குழு தலைவர் கருணாகரன், வேளாண்மை இணை இயக்குநர் மோகன், வருவாய் கோட்டாட்சியர் நாராயணன், வட்டாட்சியர் தமிழரசன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர். நீர்வரத்து மற்றும் நீர்இருப்பினை பொறுத்து 335.09 மில்லியன் கனஅடி தண்ணீர் பாசனத்திற்காக திறந்து விடப்படும். இதன்மூலம் பாலக்கோடு வட்டத்தில் பஞ்சப்பள்ளி, பெரியானூர், போடிகுட்டப்பள்ளி, சாமனூர், அத்திமுட்லு, மாரண்டஅள்ளி, குஜ்ஜாரஅள்ளி, கொலசனஅள்ளி, பி.செட்டிஅள்ளி, ஜேர்தலாவ், பாலக்கோடு, ஏர்ரனஅள்ளி, பேளாரஅள்ளி

ஆகிய கிரா மங்களில் 3260 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித் தனர்.

**கோவை ஏல மையத்தில் ரூ.3.15 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனை**

கோவை, : கோவை ஏல மையத்தில் இந்த வாரம் ரூ.3.15 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையானது. இது கடந்த வாரத்தை விட ரூ.55 லட்சம் அதிகமாகும். கோவை தேயிலை ஏல மையத்தில் நடந்த 48வது வார ஏலத்தில் தேயிலைத்தூள் உள்ளூர் ரகம்(டஸ்ட்) 2.99 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.81 லட்சம் கிலோ விற்பனையானது. 94 சதவீதம் விற்பனையாகியுள்ளது. 165 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.75.95. விற்பனை மதிப்பு ரூ.2.14 கோடி. ஏற்றுமதி ரகம்(லீப்) 1.71 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.47 லட்சம் கிலோ விற்பனையானது. 86 சதவீதம் விற்பனையானது. 87 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை ரூ.68.67. விற்பனை மதிப்பு ரூ.1.01 கோடி. கடந்த வார விற்பனை விலையோடு ஒப்பிடுகையில், 'உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1.25 அதிகரித்துள்ளது. ஏற்றுமதி ரகம் ரூ.1.70 குறைந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் இந்த வாரம் ரூ.3.15 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரம் விற்றதை விட ரூ.55 லட்சம் அதிகமாகும். கடந்த சில வாரங்களாக விற்பனை அளவும், மதிப்பும் உயர்ந்து வருகிறது, என்று ஏல மைய செயலாளர் ஸ்ரீகுமார் தெரிவித்தார்.

**பயிர் கடன் பெற்ற விவசாயிகள் காப்பீடு செலுத்த 30ம் தேதி கடைசி**

நாகை, : பயிர் கடன் பெற்ற விவசாயிகள் பயிர் காப்பீடு செலுத்த வரும் 30ம் தேதி கடைசி நாளாகும். நாகை கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பு:

தேசிய வேளாண் பயிர் காப்பீடு நிறுவனத்தின் மத்திய, மாநில

அரசுகளின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் பயிர்காப்பீடு திட்டத்தின்கீழ், 2014ம் ஆண்டிற்கான காப்பீட்டு பிரிமியத்தொகை செலுத்துவதற்கான காலக்கெடு, பயிர்க்கடன் பெற்ற விவசாயிகளை பொருத்தவரை வருகிற 30ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகளில் விவசாய கடன் பெறும் அனைத்து விவசாயிகளும் உரிய ஆவணங்களுடன் தங்களுக்குரிய பிரிமிய தொகையை வருகிற 30ம் தேதிக்குள் தொடர்புடைய நிறுவனத்தில் தவறாமல் செலுத்தி பயன் பெறலாம். விவசாயத் துறையால் பயிர் அறுவடை காலத்தில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டு, நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டு கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைகிறதோ, அந்த விகிதப்படி அந்த வட்டாரத்திலுள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்கப்படும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>பயிர் காப்பீடு செய்ய நவ.30 கடைசி நாள்</u>

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய நவ.30 கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வேளாண் இணை இயக்குநர் கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:- ‘சிவகங்கை மாவட்டத்தில் தற்போது 65ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த நெற்பயிர்கள் இயற்கை சீற்றங்கள் மற்றும் இடர்பாடுகளின் மூலம் ஏற்படும் இழப்பீட்டிற்காக காப்பீடு செய்வது அவசியமாகும். இந்த ஆண்டு தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.115.50பைசாவும், இதர விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.128ம் கட்ட வேண்டும். கடன் பெறாத விவசாயிகளுக்கு நவ.15ம் தேதியுடன் பயிர் காப்பீட்டிற்கான நாள் முடிவடைந்தது. கடன் பெற்றுள்ள

விவசாயிகள் மற்றும் கடன் பெறவிருக்கும் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய நவ.30கடைசி நாளாகும். எனவே இதுவரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உடனடியாக தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களை அணுகி காப்பீடு செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேகமாக நிரம்பும் உடன்குடி தாங்கை குளம் விவசாயிகள் மகிழ்ச்சி

உடன்குடி, : உடன்குடி தாங்கை குளம் வேகமாக நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழகத்தின் தென்கோடியான உடன்குடி வட்டாரத்தில் விவசாயம் செல்வ செழிப்பாக நடந்து வந்தது. ஆனால் நாளடைவில் பருவமழை பொய்த்தால் விவசாயம் அடியோடு அழிந்தது. நுற்றுக்கணக்கான குடும்பத்தினர் பிழைப்புக்கு வழியின்றி வெளியூர்களுக்கு குடிபெயர்ந்தனர். இதனால் ஜரூராக நடந்து வந்த வெற்றிலை, தென்னை, பனைத்தொழில்கள் முற்றிலும் அழிந்து, தற்போது ஒருசிலர் மட்டுமே செய்து வருகின்றனர். இந்த ஆண்டு கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த கனமழையின் காரணமாக சுமார் 10 ஆண்டுகளுக்கு பின் ஆங்காங்கேயுள்ள குளம், குட்டைகள் நிரம்பி வருகின்றன. மேலும் மழைநீருடன் சடையநேரி கால்வாயில் தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளதால் சடையநேரி குளம் ஓரளவு நிரம்பி தற்போது தாங்கைகுளத்திற்கு மறுகால் பாய்கிறது. மேலும் காட்டாற்று வெள்ளம் மூலம் வந்த மழைநீரும் தேங்கியிருப்பதால் தாங்கைகுளம் வேகமாக நிரம்பி வருகிறது. இதன் மூலம் ஏராளமான விவசாயிகள் பயன்பெறுவர். மேலும் நிலத்தடி நீர் மட்டமும் உயர வாய்ப்புள்ளது. தொடர்ந்து ஆண்டுதோறும் தாங்கைகுளம் நிரம்பினால் உடன்குடி பகுதிகளில் உட்புகுந்த கடல்நீர் மெல்ல மெல்ல அகன்று நல்லநீராக மாறும் மேலும் விவசாயம் செழிக்கும் என விவசாயிகள் கூறினர்

## கருமந்துறை பழப்பண்ணையை சுற்றுலாத்தலமாக்க திட்டம் கலெக்டர் தகவல்

சேலம், : சேலம் கருமந்துறை பழப்பண்ணையை சுற்றுலாத் தலமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது என்று கலெக்டர் மகரபூஷணம்

தெரிவித்தார். சேலம் மாவட்டம் கருமந்துறை தோட்டக்கலை பழப்பண்ணையில் தோட்டக்கலை வள கண்காட்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நேற்று துவங்கியது. மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் கண்காட்சியைத் துவக்கி வைத் தார். இதில் சேலம் மாவட்ட தோட்டக்கலை வளம், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது குறித்தும் ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. கண்காட்சியில் அனைத்து வட்டாரங்களில் இருந்தும் சிறந்த தோட்டக்கலை விளை பொருட்கள், நுண்ணீர் பாசன நிறுவனங்களின் வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியில் கலந்து கொண்டு மாவட்ட கலெக்டர் மகரபூஷணம் பேசியதாவது:கருமந்துறையில் அமைந்துள்ள பழப்பண்ணையில் உள்ள இரண்டு நீர்த்தேக்கக் குட்டையின் கரைகளை உயர்த்தி அதிகளவு நீர் சேமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் தேங்கும் நீரை பண்ணையின் நீர்த்தேவைக்கு உபயோகித்துக் கொள்ள வேண்டும். மேலும் குட்டைகளை ஆழப்படுத்தி, குட்டையின் கரைகளை உயர்த்த வேண்டும். நீர்த்தேக்க குட்டைகளைச் சுற்றி 3 ஏக்கர் பரப்பில் உள்ள தேவையற்ற செடி, கொடிகளை அகற்றி, சுத்தப்படுத்தி சுற்றுலாப்பயணிகள் வந்து செல்லும் வகையில் அழகுச் செடிகள் மற்றும் மலர்ச்செடிகள் நட்டு பராமரிக்க வேண்டும். பண்ணை முழுவதையும் பார்வையிடும் விதமாக அதன் வெளிப்புற சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு திட்டபணிகளை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் மகரபூஷணம் பேசினார். நிகழ்ச்சியில் ஏற்காடு எம்எல்ஏ சரோஜா, வேளாண் மை இணை இயக்குநர் ஜோசப்மோகன், தோட்டக்கலை இணை இயக்குனர் கண்ணன், தோட்டக்கலை உதவி இயக்குனர் கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ராஜேந்திரன், வேளாண்மை பொறியியல் துறையின் செயற்பொறியாளர் சிவக்குமார்,

ஊராட்சி மன்றத் தலைவர் பூங்கொடி பழனிச்சாமி மற்றும் விவசாய சங்க பிரிதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பறவைக்காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில், பறவைக்காய்ச்சல் பரவாமல் இருக்க எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க, வருகிற டிச.1ம் தேதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடக்க உள்ளதாக மாவட்ட கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கோழி இனங்களை தாக்கும் பறவைக்காய்ச்சல் கால்நடைகள் மற்றும் மனிதனுக்கு வைரஸ் மூலம் பரவுகிறது. இந்நோய்க்கு தடுப்பூசி இல்லை. இக்காய்ச்சல் கண்ட பறவைகளின் கண்களில் நீர்வடியும். நோய் கண்ட 90 சதவீத கோழிகள் இறந்து விடும். இதனை உடனடியாக அப்புறப் படுத்த வேண்டும். அசாம், கர்நாடகா மாநிலங்களில் கடந்த 2006ம் ஆண்டில் பரவியது. தமிழகத்தில் பறவைக்காய்ச்சல் வரவில்லை. தற்போது, கேரளாவில் கோட்டயம், ஆலப்புழாவில் பறவைக்காய்ச்சல் பரவியுள்ளது. கேரளாவில் இருந்து தமிழகம் வரும் கோழிகள், தீவனங்களை கொண்டு வரும் வாகனங்கள் சோத னையிட்டு கிருமிநாசினி மருந்து அடித்த பின்பு அனுமதிக்கப்படுகிறது. இந்நிலை யில், விருதுநகர் மாவட்டத்தில் பறவை காய்ச்சலை தடுக்க 33 மருத்துவர்கள் குழு அமைக்கப்பட்டுள் ளது. உயிருடன் இருக்கும் பறவைகள் திடீரென இறக்கின்றனவா என கண்காணிக்கப்படுகிறது. இக்குழுக்களின் ஒருங்கி¬ ணப்புக்கூட்டம் டிச.1ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

## நாமக்கல்லில் இன்றும், நாளையும் கறவை பசுக்கள், ஆடுகளுக்கான இனப்பெருக்க பரிசோதனை முகாம்

நாமக்கல், : நாமக்கல் மாவட்டத்தில் கறவை பசுக்கள், வெள்ளாடுகள் மற் றும் செம்மறி ஆடுகளுக் கான இனப்பெருக்க மருத் துவ பரிசோதனை

மற்றும் குடற்புழு நீக்க முகாம் இன்றும், நாளை யும் (28,29ம்தேதி) நடக்கிறது. விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில், நாமக்கல் மாவட்டத்தில் 20 11ம் ஆண்டு முதல் இவ்வா ண்டு அக்டோபர் மாதம் வரையில் 8 கிராமங்களில் உள்ள 400 பயனாளிகளுக்கு 400 கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதைபோல், 220 கிராமங்களில் 12ஆயிரத்து751 பயனாளிகளுக்கு 51 ஆயி ரத்து 4 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையில் பயனாளி களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆடுகள் 64 ஆயிரத்து 152 குட்டிகள் ஈன்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ள கறவை பசுக்கள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும். எடையினை அதிகரிக்கவும் தேவையான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் இன்றும், நாளையும் (28,29தேதிகள்) அந்தந்த கிராமங்களில் நடக்கிறது. இது குறித்து கலெக்டர் தட்சிணாமூர்த்தி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், 'விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும், பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்' என்று தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>பறவை காய்ச்சல் நோய் வராமல் தடுப்பது எப்படி? கால்நடைத்துறை அதிகாரிகள் விளக்கம்</u>



பொள்ளாச்சி,பறவை காய்ச்சல் நோய் வராமல் தடுப்பது எப்படி? என்பது குறித்து கால்நடைத்துறை அதிகாரிகள் விளக்கம் அளித்து உள்ளனர்.

<u>பறவை காய்ச்சல்</u>

கேரளாவில் ஆலப்புழை மாவட்டத்தில் பண்ணைகளில் பறவை காய்ச்சல் நோய் கிரு மிகள் தாக்கி வாத்துக்கள், கோழிகள் இறந்தன. இதை யடுத்து கேரள அரசு சுமார் 4 லட்சம் வாத்துக்கள், கோழிகளை அழிக்க உத்தர விட்டு உள்ளது. இந்த நிலையில் அண்டை மாநிலமான தமிழ கத்தில் பறவை காய்ச்சல் நோய் பரவுவதை தடுக்க முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி 3–வது நாளாக கேரளாவில் இருந்து கோழிகள் உள்பட அதை சார்ந்த எந்த பொருட்களும் தமிழகத்திற்குள் கொண்டு வர தடை விதிக்கப் பட்டு உள்ளது. மேலும் அங்கிருந்து வரும் அனைத்து வாகனங் களுக்கும் கிருமி நாசினி மருந்து தெளிக்கப் பட்டு வருகிறது. தொடர்ந்து 24 மணி நேரமும் தமிழக எல்லையில் உள்ள சோதனை சாவடியில் கால்நடைத்துறை மருத்துவ குழுவினர் மற்றும் போலீசார் தீவிர கண் காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

<u>பண்ணைக்குள் வனப்பறவைகள் நுழைய விட கூடாது</u>

பறவை காய்ச்சல் பரவுவதை தடுப்பது குறித்து கால்நடைத் துறை அதிகாரிகள் கூறியதா வது:– பறவை காய்ச்சல் நோய் கோழி, வாத்து, வான்கோழி மற்றும் வனப்பறவைகளை தாக்கும். பறவை காய்ச்சல் நோய் தாக்கி வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் பறவைகள் மூலம் நம் நாட்டில் பரவ வாய்ப்பு உள்ளது. பறவை காய்ச்சல் நோய் வராமல் இருக்க முன் னெச்சரிக்கை நடவடிக் கைகளை பண்ணையாளர்கள் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். வனப்பறவைகள் பண்ணைக்குள் நுழையாமல் பார்த்து கொள்ள வேண்டும். வாத்து, வான்கோழி, கோழி கள் உள்பட பல்வேறு இனப் பறவைகளை ஒரே பண் ணையில் வைத்து வளர்க்க கூடாது. வெளியாட்களின் வாகனங் கள் மற்றும் விலங்குகள் பண்ணைக்குள் நுழைய விட கூடாது. பண்ணை உபகர ணங்களை, மற்ற பண்ணை களில் இருந்து வாங்கி, பகிர்ந்து கொள்ள கூடாது. பண்ணை உபகரணங்களை மாதம் இரு முறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கோழி பண்ணைகளில் அசாதாரண இறப்புகள் இருந்தால் உடனடி யாக அருகில் உள்ள கால்நடை டாக்டருக்கு தகவல் கொடுக்க வேண்டும்.

<u>கோழியின் கொண்டையில் வீக்கம்</u>

கோழியின் தலை மற்றும் கொண்டை வீக்கம், கொண் டையில் நீலநிறம் பரவுதல், சோர்வு, அதிக அளவில் இறப்பு, இறந்த கோழிகள் தசைகளில் ரத்தக்கசிவு, மூச்சு குழலில் அதிக சளி அனைத்து உள் உறுப்புகள் மற்றும் கால் களின் மீது ரத்த கசிவு ஆகி யவை இந்நோயின் அறிகுறிகளா கும்.

<u>மனிதர்களுக்கு பரவ வாய்ப்பு</u>

மனிதர்களுக்கு இந்நோய் பரவ வாய்ப்பு உள்ளது. நோய் பாதித்த பண்ணைகளில் நோயற்ற மற்றும் இறந்த கோழிகளை கையாளுவோருக்கு இந்த நோய் சுவாச காற்று மூலம் பரவக் கூடும். காய்ச்சல் தொண்டை புண், இருமல் ஆகியவை மனிதர்களுக்கு இந்த நோய் வந்ததின் அறிகுறிகளாகும். நன்கு சமைத்த கோழிக்கறி மற்றும் முட்டைகள் உண்பதால் இந்நோய் பரவாது. பறவை காய்ச்சல் நோய்க்கு

சிகிச்சை அல்லது தடுப்பு மருந்து தற்போது இல்லை. சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் மட்டுமே நோய் பரவாமல் தடுக்க முடியும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**<u>அந்தியூர் வாரச்சந்தையில் வரத்து குறைவால் வெற்றிலை விலை உயர்ந்தது கற்பூர வெற்றிலை ஒரு கவுளி 18 ரூபாய்க்கு விற்பனை</u>**



அந்தியூர், அந்தியூர் வாரச்சந்தையில் வரத்து குறைவால் வெற்றிலை விலை உயர்ந்தது. ஒரு கவுளி கற்பூர வெற்றிலை 18 ரூபாய்க்கு விற்றது.

<u>அந்தியூர் வெற்றிலை...</u>

அந்தியூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பிரம்மதேசம், வேம்பத்தி, புதுக்காடு, எண்ணமங்கலம், ஊஞ்சக்காடு உள்ளிட்ட பகுதிகளில் 1000–த்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வெற்றிலை கொடி சாகுபடி செய்துள்ளார்கள். அந்தியூர் பகுதியில் உற்பத்தியான வெற்றிலைகளை விற்பதற்காக ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியூர் வாரச்சந்தையில், வெற்றிலை மார்க்கெட்டும் தனியாக நடைபெற்று வருகிறது. அந்தியூர் வெற்றிலைக்கு நல்ல மணமும், சுவையும் இருப்பதாக வெளியூர் வியாபாரிகளும் அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள். இந்தநிலையில் வழக்கம்போல் அந்தியூர் வாரச்சந்தையில் நேற்றும் வெற்றிலை மார்க்கெட் நடைபெற்றது.

<u>விலை உயர்வு</u>

விவசாயிகள் கற்பூர வெற்றிலை மற்றும் பீடா ரக வெற்றிலைகளை அதிக அளவில் கொண்டுவந்திருந்தார்கள். கற்பூர வெற்றிலை 50 எண்ணிக்கைகள் கொண்ட ஒரு கவுளி 18 ரூபாய்க்கு விலை போனது. கடந்த 2 வாரத்துக்கு முன் ஒரு கவுளி 12 ரூபாய்க்கு தான் விற்றது. பீடா வெற்றிலை ஒரு கவுளி 25 ரூபாய்க்கு விற்றது. கடந்த 2 வாரத்துக்கு முன்

17 ரூபாய்க்கே விற்றது. நேற்று நடைபெற்ற சந்தையில் ஒரு கவுளிக்கு 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விலை உயர்ந்தது. இதனால் வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். கடந்த சில நாட்களாக அந்தியூர் பகுதியில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், வெற்றிலை உற்பத்தியும் குறைந்துவிட்டது. இதனால் சந்தைக்கு வெற்றிலை வரத்து குறைந்து விலை உயர்ந்து விட்டதாக கூறப்படுகிறது. மேலும் திருமணம் மற்றும் விஷேசங்கள் அதிக அளவில் நடைபெறுவதால் தேவை அதிகரித்து அதனாலும் விலை உயர்ந்துவிட்டதாக வியாபாரிகள் தெரிவித்தார்கள்.

## <u>பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை தொடங்க 5 பேருக்கு ரூ.18 லட்சத்தில் கடன் உதவித்தொகை உதவி கலெக்டர் வழங்கினார்</u>



பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை தொடங்க 5 பேருக்கு ரூ.17 லட்சத்து 84 ஆயிரத்துக்கான கடன் உதவி காசோலைகளை உதவி கலெக்டர் வழங்கினார்.

<u>ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்</u>

பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் வங்கியாளர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் உதவி கலெக்டர் மதுசூதன் ரெட்டி தலைமை யில் நடந்தது. பல்வேறு அரசு துறைகளின் மூலம் நடைபெற்று வரும் திட்டங்களில் வங்கியாளர்களின் பங்கு குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில் உதவி கலெக்டர் பேசியதாவது:–

<u>முன்னேறிய மாவட்டமாக...</u>

பெரம்பலூர் மாவட்டம் சின்ன வெங்காயம், பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட விவசாய பொருட்களை மிகவும் நம்பி உள்ள மாவட்டமாகும்.

இந்த விளைபொருட்களை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு வங்கியாளர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் இந்த விளைபொருட்களை கொண்டு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில் ஒவ்வொரு வங்கியாளரும் தங்கள் பகுதியில் புதிய தொழில் முனைவோரை கண்டறிந்து அவர்களுக்கு கடன் உதவி வழங்கி பெரம்பலூர் மாவட்டத்தை முன்னேறிய மாவட்டமாக உருவாக்க வேண்டும்.

<u>140 கோழிப்பண்ணைகள்</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் பொருளாதார வளர்ச்சியை உண்டாக்கும் வகையில் கறிக்கோழி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் கோழிகள் கொண்ட ஒரு கறிக்கோழி பண்ணை அமைக்க ரூ.8.25 லட்சம் செலவாகிறது. இதில் ஒரு பயனாளிக்கு தமிழக அரசின் மானியம் ரூ.2 லட்சத்து 6 ஆயிரத்து 250 மற்றும் நபார்டு வங்கியின் மானியம் ரூ.2 லட்சத்து 6 ஆயிரத்து 250 சேர்த்து ரூ.4 லட்சத்து 12ஆயிரத்து 500 வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தில் பயன்பெற பயனாளி முதலில் தனது சொந்த இடத்தில் கோழிப்பண்ணை அமைத்த பின்னர்தான் மானிய உதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை பெரம்பலூர் மாவட்டத்தில் 140 கோழிப்பண்ணைகள் அரசு மானியம் மற்றும் வங்கி கடனுதவி பெற்று இயங்கி வருகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கோழிப்பண்ணை தொழிலுக்கு தேவையான தீவனப்பயிர்கள் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதால் இத்தொழில் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்றது. பெரம்பலூர் மாவட்டத்தில் மேலும் கோழிப்பண்ணைகளை உருவாக்க வங்கியாளர்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

<u>ரூ.18 லட்சம் கடன் உதவி</u>

பின்னர் உதவி கலெக்டர் மதுசூதன் ரெட்டி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் வேப்பூரைச் சேர்ந்த மருதமுத்து, அழகேசன்

ஆகியோருக்கு தலா ரூ.7 லட்சத்து 42 ஆயிரமும், ரஞ்சன்குடியை சேர்ந்த அங்கமுத்து, வீரபுத்திரன், அன்னமங்கலத்தை சேர்ந்த சேகர் ஆகிய 3 பேருக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் மொத்தம் ரூ.17 லட்சத்து 84 ஆயிரத்துக்கான கடனுதவி காசோலைகளை வழங்கினார்.

கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தஞ்சை மண்டல உதவி பொதுமேலாளர் சந்திரசேகரன், முதன்மை மேலாளர் ராஜாருக்மாங்கதன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்(பொ) அருள்தாசன், கால்நடை பரமாரிப்பு துறை உதவி இயக்குநர் மனோகரன் உள்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**நம்பியாறு அணை 3 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி**



ஏர்வாடி, 3 ஆண்டுகளுக்கு பிறகு நம்பியாறு அணை நிரம்பி இருப்பதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வடகிழக்குபருவமழை

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்ததைவிட நன்றாக பெய்து வருகிறது. இதனால் மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து உற்பத்தியாகும் ஆறுகளிலும், அணைகளுக்கும் நீர்வரத்து நன்றாக உள்ளது. பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. நம்பியாறு அணை

களக்காடு அருகே உள்ள நம்பியாறு அணையும் 3 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது நிரம்பி உள்ளது. நம்பியாறு மேற்கு தொடர்ச்சி மலையில் திருக்குறுங்குடி மலையில் உற்பத்தியாகி ஏர்வாடி, தளபதிசமுத்திரம் வழியாக கோட்டை கருங்குளம் வந்து சேருகிறது. அங்கு கொடுமுடியாறு அணை தண்ணீரும் சேரும் வகையில், கோட்டை கருங்குளத்தில் நம்பியாறு அணை அமைந்துள்ளது. இந்த அணையின் மொத்த

கொள்ளளவு 23.60 அடி ஆகும். 82.10 மில்லியன் கன அடி தண்ணீரை அதில் தேக்கி வைக்கலாம். 40 குளங்கள் இந்த அணை கடைசியாக கடந்த 2011-ம் ஆண்டு நிரம்பியது. அதன் பிறகு வடகிழக்கு பருமழை பொய்த்து போனது. குறைந்த கொள்ளளவு கொண்ட நம்பியாறு அணைகூட நிரம்பாத நிலையே ஏற்பட்டது. தற்போது தொடர் மழையால் அணைக்கு அதிகபட்சமாக விநாடிக்கு 4,600 கன அடி வரை தண்ணீர் வரத்து காணப்பட்டது. இதையடுத்து நம்பியாறு அணை அதன் முழு கொள்ளளவை எட்டியது. அதிகபட்சமாக அந்த அணையில் 22.96 அடி வரை தண்ணீரை தேக்கி வைத்துவிட்டு, உபரி தண்ணீரை வெளியேற்றி வருகிறார்கள். இதன் மூலம் நம்பி யாற்றின் கீழ் உள்ள 40 குளங்கள் முழுமையாக நிரம்பி உள்ளன. நம்பியாறு அணையில் இருந்து இடது மற்றும் வலது என 2 கால்வாய்கள் மூலம் தண்ணீர் பாசனத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில் இடது கால்வாயில் 14 குளங்கள், வலது கால்வாயில் 26 குளங்கள் என மொத்தம் 40 குளங்கள் உள்ளன. இதன் மூலம் மொத்தம் 1,780 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறுகிறது.

விவசாயிகள் மகிழ்ச்சி நம்பியாறு அணையில் இருந்து செல்லும் தண்ணீரானது, நாங்குநேரி தாலுகாவை கடந்து, ராதாபுரம் தாலுகாவில் திசையன்விளை அருகே செல்லும் போது, பரட்டையாறு, தாமரையாறு ஆகியவையும் நம்பியாற்றுடன் இணைகிறது. பின்னர் ஆத்தங்கரை பள்ளிவாசல் வழியாக சென்று கடலில் கலக்கிறது. வழக்கமாக இந்த அணை தண்ணீர் கடைசியாக உள்ள கீழப்படுகை குளத்தை எட்டுவதற்கே சிரமப்படும். ஆனால் நடப்பு ஆண்டில் பெய்த பலத்த மழையால் கீழப்படுகை குளமும் முழுமையாக நிரம்பி உபரி நீர் ஆற்றுப்படுகை வழியாக கடலில் சென்று கலக்கிறது. தற்போது விவசாயத்துக்கு போதுமான அளவு தண்ணீர் குளங்களில் தேக்கி வைக்கப்பட்டு உள்ளதால், விவசாய பணிகள் முழு வீச்சில் நடந்து

வருகின்றன. இதுதவிர அணையிலும் முழு கொள்ளளவுக்கு தண்ணீர் இருப்பு உள்ளதால், நெல் சாகுபடி முழுமையாக முடித்து, அடுத்தகட்ட சாகுபடிக்கும் அணையில் இருந்து தண்ணீர் கிடைக்கும் என்று விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளார்கள். வெள்ளநீர் கால்வாய் திட்டம் இந்த நம்பியாற்றுடன், தாமிரபரணி, கருமேனியாறு இணைப்பு திட்டம், வெள்ளநீர் கால்வாய் திட்டம் என்ற பெயரில் ரூ.396 கோடி மதிப்பில் தொடங்க அரசு உத்தரவிட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. இந்த பணிகள் பாதியிலேயே கிடப்பில் போடப்பட்டுவிட்டன. இந்த பணியை முழுமையாக நிறைவேற்றினால், தாமிரபரணி ஆற்றின் மூலம் கிடைக்கும் உபரி நீரை கொண்டு நம்பியாறு பாசன விவசாயிகளுக்கு, மழை இல்லாத காலத்திலும் தண்ணீர் வழங்க முடியும். எனவே வெள்ளநீர் கால்வாய் திட்டம், நதி நீர் இணைப்பு திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.